<u>மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை-10 அவர்களின் செயல்முறை ஆணை</u>
<u>முன்னிலை. மரு. ரா. நாராயணபாபு, எம்.டி., டிசி.எச்.,</u>

ந.க.எண். 33741/அ1 (2)/2019 நாள்.16.09.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சு பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.க.அருணா (த/பெ. (லேட்) திரு.D.கருணாகரன்),இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டது – பணி வரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை. நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்
2. அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 26.06.1995
3. அரசாணை (நிலை) எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 12.03.2007
4. அரசாணை (நிலை) எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 08.10.2007.
5. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 23.01.2020.
6. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 26.02.2021.
7. அரசு கடித எண். 8775/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2)துறை, நாள்: 16.03.2021.
8. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண். 18465/நி2/4/2018, நாள்:26.04.2019.
9. இவ்வியக்கக பணிநியமன ஆணை ந.க.எண் 33741/அ1/2/2019, நாள்:29.04.2019.

********

<u>ஆணை:</u>

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அலுவலக கண்காணிப்பாளராக (Office Superintendent) பணியாற்றிய திரு.D கருணாகரன் அவர்கள் 08.01.2007 அன்று பணியிடை இறந்துள்ளார். இவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். அவரின் பிறந்த தேதி 05.11.1955 ஆகும். அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் தனியரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.11.2013 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததை தொடர்ந்து, இறந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.க.அருணா அவர்கள் தனது 22.03.2007 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார்.

2) மனுதாரர் திருமதி.க.அருணா அவர்களின் பிறந்த தேதி 13.09.1987 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம்

பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17 (1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)–ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19,500–71900/– நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு மருத்துவக் கல்வி இயக்ககத்தில், 29.04.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, பார்வை (6) மற்றும் (7)–ல் காணும் அரசாணைகளின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.அருணா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, தனியர் பணியில் இணைந்த நாளான 29.04.2019 மு.ப. முதல் அவரது பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். தனியர் தனது தகுதிகாண் பருவகாலத்தினை பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளில் இரண்டாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் எனவும், மேலும் தகுதிகாண் பருவ காலத்தில் துறைத்தேர்வுகள் மற்றும் அரசுப்பணியாளர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4) தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை ஆணை வழங்குதல் குறித்த பதிவுகள் பதியப்பட்டன.

ரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்

//உண்மை நகல்/அனுப்பப்படுகிறது//

மேலாளர் 16/08/2021

பெறுநர்:

1) திருமதி.க.அருணா, இளநிலை உதவியாளர்,
மருத்துவக் கல்வி இயக்ககம்,
சென்னை–10
2) மாநில கணக்காயர், தேனாம்பேட்டை, சென்னை–18
3) சம்பளம் (ம) கணக்கு அலுவலர் (தெற்கு),சென்னை–15

நகல்:

1) இயக்குநர், மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் துறை, சென்னை–06
2) பணிப்பதிவேடு.
3) இருப்புக்கோப்பு/உதிரி.